திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Karisal Dialect in Ki.Ra's Koballa kiramam

Dr. M. Ramesh Kumar

Assistant Professor, Department of Linguistics, Tamil University, Thanjavur, India

Manuscript ID : **MT148A0087**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 02.11.2022
Revised: 07.11.2022
Accepted: 10.11.2022
Published: 14.11.2022

Pages : 83-90

DOI: 10.5281/zenodo.7372422

ABSTRACT:

K. Rajanarayanan, called as Ki. Ra, is a well-known pioneer of dialect dictionary, storyteller, Sahitya Akadhemi Awardee. He studied upto 7th standard and worked as a professor in Pondicherry University. Innumerable spoken forms and Karisal regional dialects are found in his works. His 'Karisal dialect Dictionary' has brought about a renaissance in dictionary making. As a result of creating a unique identity for himself in creating series, stories and novels, he has expressed the vocabulary found in the Nellai District in every one of his publications. Among them, this article is intended to highlight the colloquial speech and the Karisal dialect in the novel 'Koballa Kiramam' on the basis of sociolinguistics.

KEYWORDS:

Dialect, Dialect Dictionary, Spoken Variety, Spoken Tamil, Dialect Languages, Ki. Rajanarayanan, Ki. Ra

கி.ரா.வின் கோபல்ல கிராமத்தில் கரிசல் வட்டாரவழக்கு

முனைவர் மா. ரமேஷ்குமார்,
உதவிப்பேராசிரியர்,
மொழியியல்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

கி.ரா. என்று அழைக்கப்படும் கி. ராஜநாராயணன் அவர்கள் வட்டார வழக்குச்சொல் அகராதியின் முன்னோடி, கதைச்சொல்லி, சாகிதிய அகதெமி விருதுக்கு சொந்தக்காரர், ஏழாம் வகுப்பு வரை படித்து பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரிந்தவர் என்ற சிறப்புகளுடன். இவரின் படைப்புகளில் பேச்சுவழக்கும் கரிசல் வட்டார வழக்கும் எண்ணிலடங்காதவையாக காணப்படுகின்றன. இவரின் 'கரிசல் வட்டார வழக்கு அகராதி' அகராதி உருவாக்கத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது என்று கூறலாம். தொடர்கள், கதைகள், நாவல்கள் படைப்பதில் தனக்கென தனி அடையாளத்தை உருவாக்கிக்கொண்டதன் விளைவாக, நெல்லைப்பகுதியில் காணப்படும் சொல்வளங்களை ஒவ்வொரு வெளியீடுகளிலும் வெளிபடுத்தியுள்ளார். இவற்றில் 'கோபல்ல கிராமம்' என்ற நாவலில் விரவிக்கிடந்த பேச்சு வழக்கையும் கரிசல் வட்டாரவழக்கையும் சமுதாய மொழியியல் நோக்கில் எடுத்துக்கூறும் முகமாக இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

கருச்சொற்கள்

வட்டார வழக்கு, வட்டார வழக்கு அகராதி, பேச்சு வழக்கு, பேச்சுத்தமிழ், கிளைமொழிகள், கி. ராஜநாராயணன், கி.ரா

முன்னுரை

கி. ராஜநாராயணன் நாவல்கள் எளிமையாகவும் பேச்சுவழக்கு மற்றும் வட்டாரவழக்குச் சொற்களால் நிறைந்தும் காணப்படும் என்பது அவருடைய நாவல்களையும் கதைகளையும் தொடர்களையும் படித்தவர்களுக்குத் தெரியும். இந்த கருதுகோளின் அடிப்படையில் கி.ரா.வின் முதல் நாவலான கோபல்ல கிராமம் என்ற நாவலில் காணப்படும் வட்டார வழக்குச்சொற்கள், அவருடைய பேச்சு நடையின் தாக்கம் உள்ளிட்டச் செய்திகளைச் சமுதாயமொழியியல் கூறுகளின் அடிப்படையில் அடையாளப்படுத்தும் நோக்கமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இக்கட்டுரைக்கு ஆய்வுக்களமாக 'கோபல்ல கிராமம்' என்ற இவரது முதல் நாவல் மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

கரிசல் பகுதி

கரிசல் பகுதி என்பது நெல்லை மாவட்டத்தையும் அதனைச் சுற்றியுள்ளப் பகுதியுமாகும். கி.ரா. கோவில்பட்டிக்கு அருகில் உள்ள இடைச்செவல் எனும் கிராமத்தில் தனது இளமைப்பருவத்தில் வாழ்ந்துள்ளார். இதனால் இவருடைய படைப்புகளில் கரிசல்பகுதியின் மண்வாசனைப் பதிந்துள்ளது. அம்மக்களின் பண்பாடு பழக்கவழக்கங்களையும் கண்முன்னே காட்டுவதாக உள்ளன.

பேச்சு வழக்கு

தமிழ் மொழியில் பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு என்று இரு பிரிவுகள் உண்டு. மக்கள் வாழும் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தனித்துவம் உண்டு, அவை மனிதர்களின் தோற்றத்திலும், மொழியமைப்பிலும் வெளிப்படுகின்றன. இது இக்காலத்தில் தோன்றியது அல்ல. சங்ககாலம் முதல் இன்றுவரை இத்தொடர்பு இருந்துகொண்டுதான் இருக்கின்றது. இதை தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்களும் தெளிவுபடுத்தியுள்ளன. அக்காலத்தில் உருவாக்கப்பட்ட சங்க இலக்கியத்திலும் இத்தகைய இயல்புவழக்கு, தகுதிவழக்கு காணப்படுகின்றன. இத்தகைய இரட்டைவழக்கு குறித்து ஃபெர்கூசன், வில்லியம் பிரைட் 1970, இ. அண்ணாமலை 1976, ஆரோக்யநாதன் 1979, ஆகியோர் ஆய்வு செய்துள்ளனர்.

கி.ரா. எழுதத் தொடங்கிய காலத்தில் தனித்தமிழ் இயக்கம் மிகத்தீவிரமாக இருந்தது என்று கூறுவர். ஆனால் இவரைப் பொறுத்தவரையில் பேச்சுத்தமிழ் மிகவும் முக்கியம் என்று கருதினார். நாட்டுப்புறக் கதைகள் அனைத்தும் பேச்சுத் தமிழில் அமைந்தவை என்பதை அவருடைய உரையாடலில் சுட்டிக்காட்டியுள்ளார். கடைசிவரை அந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துள்ளார். இதனால் இவருடைய நாவல், கதைகள், தொடர்கள் அனைத்தும் பேச்சுத்தமிழிலேயே அமைந்துள்ளதைக் காணமுடிகின்றன.

இதனால் பேச்சுத்தமிழ் சார்ந்து ஏராளமான சொற்களைக் கோபல்ல கிராமத்தில் பேச்சுவழக்கில் காணமுடிகின்றன. பேச்சுமொழியில் உள்ள வினைகள் சில இவ்வட்டார வழக்கில் தனித்துவமானதாக உள்ளன. அவை

கீச்சி	-	**கையால் கீறி கோடுவரைதல்**
கழத்தி	-	**கழட்டி**
கொண்டா	-	**கொண்டுவா**
தப்பிச்சிரப்பிடாது	-	**தப்பிக்கக் கூடாது**

பெயரடை, வினையடைச் சொற்களும் பொது வழக்கில் இருந்து மாறுபட்டு காணப்படுகின்றன. அவை

தோதாகவும்	-	**வசதியாகவும்**
இம்மி குறையாது	-	**சிறிதும் குறையாது**
வெத்து ஆள்	-	**வெற்று ஆள்**
ஒரு தேரத்துக்கு	-	**ஒரு முறைக்கு**
சோப்பு கண்டாங்கி சேல	-	**சிவப்பு கண்டாங்கி சேலை**

பெயர்ச்சொற்கள்

பொக்கலங்கள்	-	**கொப்பளம்**
ஏனம்	-	**பாத்திரங்கள்**

மேலே உள்ள சொற்கள் முறையான அமைப்பு இல்லாமல் மாற்றம் கண்டுள்ளன. ஆனால் இந்த நாவலில் கி.ரா. பேச்சுவழக்கில் சில முறைமைகளைக் கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அவற்றில் பெரும்பாலான மெய்யெழுத்தைக் கொண்டு முடியும் சொற்களின் இறுதியில் /எ/ என்று ஒலியுடன் காணப்படுகின்றன. மெய்யெழுத்துக்களைப் போலவே /ஐ/ என்னும் ஒலியுடன் முடியும் சொற்களும் /எ/ என்ற ஒலியனுடன் முடிகின்றன. அவை

குத்தமில்லெ
தெசையலெ
காலையிலெ
கோவத்திலெ

இடம், காலம் சார்ந்த சொற்களும் பொதுவழக்கில் இருந்து மாறுபட்டுள்ளன. அவை

கிட்டெ
மின்னாடி
பிற்பாடு
சாய்ந்திரம்

இதுபோலவே, பல்வேறு சொற்கள் பேச்சுவழக்கில் பயன்படுத்தப்பட்டள்ளதைக் காணமுடிகின்றது. மேலும் சொற்களின் இறுதியில் வரும் மெய்யெழுத்துக்கள் பேச்சுவழக்கில் விடுப்பட்டு போவதும் உயிரொலிகளுடன் வருவதையும் காணமுடிகின்றது.

வட்டாரவழக்கு

வட்டார வழக்கு என்பதற்கு, ஒலிப்பு முறை, சொல் அமைப்பு, இலக்கண அமைப்பு ஆகிய கூறுகளின் அடிப்படையில் பொதுமொழியிலிருந்து சற்றே வேறுபடுவதும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சார்ந்தவர்களால் மட்டுமே பேசப்படுவதுமான மொழிவழக்கு என்று 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' விளக்கம் தருகின்றது. இது போலவே வி.அய். சுப்பிரமணியன் (1975) "தமிழில் வட்டார வழக்குகளே அந்தந்த வட்டாரங்களிலும் நிலைபேறடைந்துள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார்.

சில அறிஞர்கள் இதை கிளைமொழிகள் என்றும் வழங்குவதுண்டு, கிளைமொழி என்பது ஒரு குறிப்பிட்ட பேச்சுமொழியின் வகையைக் குறிப்பதாகும் என்று சு. சக்திவேல் குறிப்பிடுகிறார். இவற்றிற்கு ஏற்ப ஒவ்வொரு வட்டாரத்திலும் தனித்தனியே ஏராளமான சொற்கள் பயன்பாட்டில் உள்ளன. இதன் விளைவாக தமிழகத்தில் பல்வேறு வட்டார வழக்குகள் உள்ளதை நம்மால் அறியமுடிகின்றது.

கி.ரா. கோபல்ல கிராமம் என்ற நாவலை முதன் முதலில் 1976ஆம் ஆண்டு வெளியிட்டார். அதுவரையில் அவர் வெளியிட்ட சிறுகதைகள், நாவல்கள், மற்றும் கட்டுரைகளை அடிப்படையாகக்கொண்டு வழக்குச்சொல்லகராதியை (கரிசல் வட்டார வழக்கு அகராதி) 1982 ஆம் ஆண்டு அன்னம் வெளியீடாக வெளியிட்டார். இதனால் இவர் வட்டார வழக்கு அகராதியின் முன்னோடி என்றும் அழைக்கப்படுகின்றார். இதன் தொடர்ச்சியாக ஏராளமான வட்டார வழக்குச்சொல் அகராதித்தொகுப்புகள் உருவாகியுள்ளன. அவை,

புலவர் இரா. இளங்குமரனின் வழக்குச் சொல்லகராதி, டி.எம். காளியப்பாவின் கொங்குத் தமிழ், பெருமாள் முருகனின் கொங்கு வட்டாரச் சொல்லகராதி, ச. மகாலட்சுமியின் கோவை மாவட்ட வழக்குச் சொல்லகராதி, புலவர் மணியன் அவர்களின் கொங்கு நாட்டுத் தமிழ், ப. முருகையாவின் நெல்லை வட்டார வழக்குச் சொல்லகராதி, வெள் உவனின் நெல்லை வட்டார சொல்தொகை, அ.க. பெருமாளின் நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்லகராதி, வே. பழநியப்பனின் செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொல்லகராதி, கண்மணி குணசேகரனின் நடுநாட்டுச் சொல்லகராதி, இரா. இரவிக்குமாரின் கொங்கு வட்டார வழக்குச் சொல்லகராதி, மங்கையற்கரசியின் மத்திய வட்டார வழக்கு உள்ளிட்ட ஏராளமான அகராதிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

கி.ரா.வின் வழக்குச்சொற்களும் அவருடைய கோபல்ல கிராமத்தில் காணப்படும் சொற்களும் அவரின் வட்டாரத்தில் மட்டும் பயன்படுத்தப்பட்ட சொற்களின் பதிவாகவும் பொது வழக்கில் இருந்து முற்றிலும் மாறுபட்ட வட்டார சொற்களாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இந்நாவலில் காணப்படும் சொற்கள் இவரின்

இளமைக்கால அனுபவங்களும், இவருடைய படைப்பில் விவசாயம் சார்ந்த சொற்களும் மரம், செடிகொடிகள், விலங்குகளின் பெயர்களும் வட்டார வழக்காக வெளிப்பட்டுள்ளன.

உதாரணமாக: ஏர் உழ **நாங்கில்மர** ஏரும், ஏர் உழுவதற்கு செல்லும் பொழுது வழியில் மண் பறிந்து மேலே வராமல் ஓட்டிச்செல்வதைக் **கோட்டேர்** என்றும், வயலில் **ரெட்டைக்கலப்பையைப்** பயன்படுத்தி உழவுதொழிலில் புதுமையை ஏற்படுத்தியதும், மழைக்காலம் வருவதற்கு முன் நிலத்தை உழுது பக்குவப்படுத்தி வைப்பதை **எழும்படிப்பு** என்றும், **பைதா** என்பது வண்டிச்சக்கரத்தையும் இந்நாவலில் கி.ரா. குறிப்பிட்டுள்ளார். மேலும் பின்வரும் மரம், செடிகள் மற்றும் அதனைச்சார்ந்த வட்டார வழக்குச் சொற்களையும் பதிவுசெய்துள்ளார்.

எடுத்துக்காட்டு: மரம், செடி, கொடிகள்

உடைமரங்கள்	ஜம்புதட்டைகள்
மஞ்சணத்தி- நுணா மரம்	ஈக்கிகள்- சோளத்தட்டைக் குச்சிகள்
தைவாழைச்செடிகள்	கம்மம்புள் களஞ்சியம்
சாரணத்தி- கீரை	ஆயிலை - ஆலமரத்து இலை
கூளம்	புளிய விளாறுகள்
நெய் தக்காளி பழம்	

விலங்குகள், பறவைகள், பூச்சிகள்

வெருகுபூனை
கதுவாலிப்பறவை
தலைக்கோழி
சேடா
விட்டில்கள்
அண்டரெண்ட பட்சி

'கோபல்ல கிராம்' நாவலில் ஏராளமான பறவை, விலங்குள் பூச்சிகளின் பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றில் சில தனித்துவமான வட்டாரச் சொற்களாகும். அவை; **வெருகுபூனை** என்பது காட்டில் வளரும் பூனையாகும். இது வெருகுப்பூனை என்ற பெயரில் இந்நாவலில் உள்ளது. வெருகு என்ற சொல் சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் (117, 324, 326) இடம்பெற்றுள்ளது. **கதுவாலி பறவை** என்பது கவுதாரியைக் குறிக்கும். இதன் ஒலி மற்றப் பறவைகளைக்காட்டிலும் தனித்துவமானதாகும். **தலைக்கோழி** என்பது விடியற்காலையில் முதலில் கொக்கரிக்கும் சேவலாகும். **சேடா** என்பது ஒருவகை (பூரான்) விசப்பூச்சியாகும் இது சடைப்பூரான் என்றும் அழைக்கப்படுவதுண்டு, **விட்டில்கள்** என்பது விளக்கு வெளிச்சத்தை நோக்கிவரும்

சிறியவகைப் பட்டாம்பூச்சியைக் குறிப்பிடாமல் வெட்டுக்கிளியை விட்டில் பூச்சி என்று இந்நாவலில் கூறியுள்ளார். இதுபோன்று பல்வேறு வழக்குச்சொற்கள் உள்ளன.

அணிகலன்கள்

இந்நாவலில் கதை மாந்தர்களில் பொன்வேலை செய்யும் ஆசாரியின் கதையைக் கூறுவதாலும் செல்வச்செழிப்பான குடும்பமாக காணப்படுவதாலும் ஏராளமான அணிகலன்களைப் பதிவுச்செய்துள்ளார். அவற்றில் காணப்படும் வட்டார வழக்குச்சொற்கள்; பெண்கள் காதில் அணியும் அணிகலன்களாக **பாம்படம், வண்டிக்கம்மல், கொப்பு** உள்ளிட்டவைகளும், மூக்கில் அணியும் அணிகலன்களாக **புல்லாக்கு, தொறட்டி** என்றும், ஆபரணங்களில் பதிக்க வைரம்போல உயர்ந்த வகை கற்களில் ஒன்றான சிகப்பு நிறத்தாலான **கொம்புக்கற்களும்**, பெண்களின் கால் பாதத்தில் பூசப்படும் திரவமான **செம்பஞ்சு** என்று அணிகலன்களைக் கி.ரா. காட்சிப்படுத்தி காட்டியுள்ளார்.

பெயரடைச்சொற்கள்

தீவட்டிக் கொள்ளையன்
பாரியான உருவம்
சேடி பெண்கள்

வினையடைச்சொற்கள்

தாட்டியமாய் வாழ்ந்த குடும்பம்
மருண்டு ஓடும் மிருகம்
டக்கு வச்சி பேசினான்.
அக்கையாவை **கெண்டை** பண்ணிக்கொண்டே போனான்.
சில்லாக்கியமாய் தெரிகிறது
உயிரை **திரணமாக** மதித்து மாட்டை அடக்கினான்.

இந்த தொடர்களில் உள்ள சொற்கள் வட்டார வழக்கிற்குச் சிறந்த உதாரணமாகும். **தாட்டியமாய், மருண்டு, டக்கு, கெண்டை, சில்லாக்கியமாய், திரணமாக** உள்ளிட்ட சொற்கள் **சிறப்பாக, பயந்து, பொடி, கிண்டல், நல்லதாய், துச்சமாய்** என்ற பொருள்களைக் வழங்குகின்றன.

மேலும் சில சொற்கள் **நெமை** - இமை, **ரோகங்கள்** - நோய்கள், **கும்பா, போகணி** - சாப்பாடு கொண்டு செல்லும் பாத்திரம், **வட்டில்** - தட்டு, **மோடி** - சண்டை, **முளைத்தயிர்** - புதுத்தயிர் (அதிகம் புளிக்காத தயிர்), **ருசிக்கல்** - உப்புக்கல், **லேஞ்சி** - தலைப்பாகை, **பொறை** - தொழிற்சாலை, **பாதரவு** - தொல்லை,

சிட்டங்கள் - அளவு, **உறைகுத்துதல்** - பாலில் (தயிருக்கு) பிறைமோர் இடுதல், **தழையிறது** - இறந்த கன்றுக்குட்டிக்குப் பதிலாக மற்றொரு கன்றுக்குட்டியைத் தாய்ப்பசுவுடன் சேர்த்துவைப்பது, **கொடியடுப்பு** - அடுப்பின் பக்கவாட்டில் இணைக்கப்பட்டுள்ள இணையடுப்பு, **சிலாகிச்சார்** உள்ளிட்ட பல்வேறு சொற்கள் கோபல்ல கிராமம் நாவலில் கி.ரா. பயன்படுத்தியுள்ளார்.

முடிவுரை

கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்பட்ட கி.ரா. அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் சொற்களஞ்சியமாக திகழ்ந்துள்ளார். மக்களின் பண்பாட்டையும் வாழ்க்கை முறைகளையும் தனது அனுபவங்களையும் வைர வரிகளாக பதிவு செய்துள்ளார். கோபல்ல கிராமத்தில் மட்டும் ஏராளமான சொற்களை அடையாளம் கண்டதுபோல் அவருடைய மற்ற படைப்புகளில் இருந்தும் ஏராளமான வட்டார வழக்குச்சொற்களைப் பட்டியலிட்டுக் காட்டலாம். இந்நாவலில் சில வட்டார வழக்குச் சொற்களுக்கு இவரே விளக்கமளித்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். இவரது அகராதித் தொகுப்பிலும் படைப்புகளிலும் நெல்லைப்பகுதிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. அவை மட்டுமல்லாமல் இந்நாவலில் தெலுங்கு உள்ளிட்ட பிறமொழிச்சொற்களும் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

துணைநூற்பட்டியல்

1. ஆரோக்கிய நாதன் எஸ். 1986, **மொழியியல் இரட்டை வழக்கு**, மணிவாசகர் பதிப்பகம்.
2. கருணாகரன் கி. 2007, **சமுதாயமொழியியல்**, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
3. சீனிவாச வர்மா கோ. 1980, **இருமொழியம்**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம்
4. சக்திவேல் சு. 2018, **தமிழ்மொழி வரலாறு**, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
5. நீலகண்டன் வெ. & குருஸ்தனம், **கி.ராவின் நேர்காணல்**, ஆனந்தவிகடன் 21.01.2021
6. ராஜ நாராயணன் கி. 1976, **கோபல்ல கிராமம்**, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில் (மறுபதிப்பு 2016).
7. ராஜ நாராயணன் கி. 1982, **கரிசல் வட்டார வழக்குச்சொல்லகராதி**, அன்னம் வெளியீடு. (மறுபதிப்பு 2012).
8. ராமகிருஷ்ணன் எஸ். 2008, **கிரியாவின் தற்கால தமிழ் அகராதி**, கிரியா
9. வெங்கடேசன் இரா. 2007, **தமிழில் வட்டார வழக்குச்சொல் அகராதி உருவாக்கம்**, கீற்று (இணைய இதழ்).

REFERENCES

1. Arokiyanadhan .S 1986, **Linguistics Diglosia**, Manivasakar Pathippkam, Chidambaram.
2. Karunakaran .K 2007, **Sociolinguistics**, Manivasakar Pathippakam, Chidambaram.
3. Neelagandan .V & kurushthanam, **Ki.ra Interview**, Anandha vikadan, 21.01.2021.
4. Rajanarayanan .K 1976, **Koballa Kiramam**, Kalachchuvadu Pathippakam, Nagarkovil (Reprint 2016).
5. Rajanarayana .K 1982, **Karisal Vattara Valakkuchchol akarathi**, Annam Veliyidu, (Reprint 2012).
6. Ramakrishnan .S 2008, **Kriyavin Tharkala Tamil Akarathi**, Kriya
7. Srinivasa Varma .K 1980, **Bilingualism**, All India Tamil Linguistics Association, Annamalai Nagar, Chidambaram.
8. Sakthivel .S 2018, **History of Tamil Language**, Manivasakar Pathippakam, Chidambaram.
9. Venkatesan .R 2007, **Tamil Vattara vazhakkuchchol akarathi uruvakkam**, keetru (Online Journal).